2014 ஜுலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி. ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்திநகர் பகுதியானது ஆதி திராவிடர் மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். அந்தச் சமுதாயத்திற்குப் பாத்தியப்பட்ட 5 செண்ட் நிலம் உள்ளது. அந்தச் சமுதாயத் தலைவர்கள் அனைவரும் அந்த இடத்தை எழுதிக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிதியை ஒதுக்கி, சொந்தக் கட்டடம் கட்டித் தருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மீண்டும், மீண்டும் அதனையே வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும் கூடிய விரைவில் அந்த இடத்தினைப் பெற்று, புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

மாணவர் விடுதி

***4609—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாளவாடி ஒன்றியம், ஆசனூரில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 11

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தாளவாடி ஒன்றியம், ஆசனூரில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.*

திரு. பி.எல். சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசனூர் பகுதி முழுவதும் மலையும் அடர்ந்த வனமும் சூழ்ந்த பகுதியாகும். இங்கு பழங்குடியினருக்கான உண்டு உறைவிடப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இது மேல்நிலைப் பள்ளியாகும். இந்தப் பள்ளியில் சுமார் 365 பேர்கள் படிக்கிறார்கள். அங்குள்ள பழங்குடியினருக்கான விடுதியில் 172 பழங்குடி மாணவ—மாணவியர்கள் தங்கிப் படிக்கிறார்கள். மீதமுள்ள பிற்படுத்தப்பட்ட மாணவ—மாணவியர்கள் தங்கிப் படிக்க வசதியில்லை. இம்மலைப் பகுதியில் பள்ளிக்கு வந்து செல்வதில் பழங்குடியினருக்கு உள்ள அனைத்து சிரமங்களும் பிற்படுத்தப்பட்ட மாணவ—மாணவியர்களுக்கும் உண்டு. ஆகவே, அரசும், மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்து, இந்த இடத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவ—மாணவியர்களுக்கு விடுதி அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், தாளவாடி ஒன்றியம், ஆசனூர் பகுதி மலைப் பகுதியாகும். இங்கு பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவ—மாணவியர்கள் அரசு மலைவாழ் உண்டு உறைவிட துவக்கப் பள்ளியிலும், அரசு மலைவாழ் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்று வருகிறார்கள்.*

மேற்படி பகுதியில் புதிதாகப் பிற்படுத்தப்பட்ட நல மாணவ–மாணவியர்கள் விடுதி துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் வரன்முறைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.*

திரு. பி.எல். சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுக்கு என்ன சிரமம் இருக்கின்றதோ, அதே அளவுக்கு பிற்படுத்தப்பட்ட மாணவ–மாணவியர்களுக்கும் சிரமங்கள் இருக்கின்றன. மலைப் பகுதியில் ஓர் ஊருக்கும், அந்தப் பள்ளிக்கூடத்திற்கும் செல்ல வேண்டுமென்றால் 8 கிலோ மீட்டர், 9 கிலோ மீட்டர் தொலைவு செல்ல வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் பரிசீலனை செய்து, ஆசனூர் பள்ளிக்கூடத்திற்குப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக ஒரு விடுதி அமைத்துத் தருமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*